<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 28.08.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

1. மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் வருடாந்திர பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 15.02.2019ல் ஒப்பந்ததாரர் திரு.ம.கோவிந்தன் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 2018ம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் முதல் வருடம் முடிவடைந்து ஒரு ஆண்டிற்கு பராமரிப்பு தொகை ரூ.17.06 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.626 நாள்.22.09.2016ல் அனுமதி பெறப்பட்டு இரண்டாம் ஆண்டிற்கான பராமரிப்பு தொகை ரூ.17.06 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.46 நாள்.28.02.2017 மற்றும் 2019ம் ஆண்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.8 நாள்.11.01.2019ல் பெறப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட பராமரிப்பு பணி பிப்ரவரி மாதத்துடன் முடிவடைந்ததால், மேலும் மூன்று மாதங்களுக்கு பணியினை நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.48 நாள்.28.02.2020ல் பெறப்பட்டு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நகர்மன்ற தீர்மான102 நாள்.26.05.2020ல் பெறப்பட்டு மூன்று மாதங்களுக்கு (ஜீன், ஜீலை மற்றும் ஆகஸ்ட்) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 2020–2019ம் ஆண்டு செந்தூர விலை விகித பட்டியலின் படி மேற்கொள்ள திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையராக அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் அவர்களின் கடித ந.க.எண்.1473/2020/டி2 நாள்.20.08.2020–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறும் வரை பழைய விலைவிகித அடிப்படையில் அதே ஒப்பந்ததாரர் மூலம் (திரு.கே.கோவிந்தன்) மேலும் இரண்டு மாதங்களுக்கு (செப்டம்பர் மற்றும் அக்டோபர்) பணியை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.4495/2016/இ1)**

**தீர்மான எண்.** 138 **நாள்** 28.08.2020

**அனுமதிக்கப்பட்டது**

**2.** மேட்டூர் நகராட்சி அலுவலக வளாகம் வர்ணம் பூசப்படாமல் உள்ளதால் புதியதாக நகராட்சி அலுவலகத்திற்கு வர்ணம் பூசவும், மேலும் நகராட்சி அலுவலகத்தில் மராமத்து பணிகளை மேற்கொள்ளவும், நகராட்சி அலுவலக நுழைவாயில் அருகே உள்ள கொடி கம்பத்தினை சுற்றி சிமெண்ட் தளம் அமைக்கவும் உத்தேச செலவினம் ரூ.**9.80** இலட்சம் (ரூ.ஒன்பது லட்சத்து என்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2518/2020/இ1)**

**தீர்மான எண். 139 நாள் 28.08.2020**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.